# திருமண வாழ்த்து மடல்!

**மணநாள்: 27-08-2021**
**நிகழ்விடம்: திருவாரூர்**

**மணமகன்:** செல்வன் **பரணிதரன்**
**மணமகள்:** செல்வி **சௌமியா**

எங்களின் சீமை என்னும்
ஏற்றமிகு பெருமை கொள்ள,
அங்கமாய் நிறைந்த ஈசன்,
ஆன்ற திருக்கோயில் தானும்;
எங்களூர் ஒட்ட குடியான,
எதிரிலி சோழ புரம் என்பதாக,
தங்கிய சீர் பெருமை தானே,
தகைவுடன் மனத்தை ஆளும்!



பொங்குமாக் கடலைப் போலே,
பொலிந்த தாம்சீர் காவிரி;
வங்கக் கடல்தனைக் கலக்கும்,
வளர்ந்தசீர் பெருமையோடு!
எங்கும் காணா இன்பம்
எய்திய வேளாண் அறமாம்!
அங்கோர் குடியில் பிறந்த,
அன்பின் ஜெயசங்கர்-இந்திரா,



சிங்கமாய் பெற்ற மகனாம்,
விஜய்எனும் பரணிதரன்,
அங்கமாய் மனையறம் ஏற்கும்
ஆன்ற சீர் நாளாம் இன்று!
நங்கையாம் சௌமியா தன்னை
நலமுடன் கைத்தலம் பற்ற,
தங்களின் மகளாய் பெற்ற,
பக்கிரிசாமி கலைச் செல்வி.

மனமுவந்து இசைவு கூட்ட,
தன்னிறை அன்பின் மாந்தர்
மனம்கொண்டு தாமும் வந்திருந்து,
மங்கல நாண் சூட மகிழ்ந்தார்!
மனங்கூடி மகிழ்ந்திருந்து நல்ல
மணம்பரப்பி வாழ்தல் வேண்டும்!
மனம்கொண்ட அன்பால் நிறைந்து,
மகிழ்வுடன் வாழ்த்து வேனே!



அன்புடன்,

**கு.ப. அசோகன்,**
27-08-2021

செம்பாக்கம்,
சென்னை—73